...astern University, Sri Lanka ... 2004

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி-I 1999/2000 (வெளிவாரி) (ஜனவரி-2004)

## HC 201 இந்தியாவில் இந்துநாகரிக வளர்ச்சி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

---

01. வைணவ சமயத்தின் சிறப்பியல்புகளை பின்வரும் அடிப்படையில் விளக்குக.
   I. வைணவ இலக்கணமும், பஞ்ச சம்ஸ்காரமும்.
   II. விஷ்ணுவின் ஐந்து நிலைகள்
   III. அவதாரம்
   IV. மந்திர இரஹஸ்யங்கள்

02. I. வட இந்திய பக்தி நெறியாளர்கள் யாவர்?
   II. வட இந்தியாவில் பக்தி நெறியாளர்கள் தோன்றுவதற்கு காரணமாய் அமைந்த அம்சங்கள் எவை?
   III. வட இந்திய பக்தி நெறியாளர்களுள் ஒருவரைத் தெரிந்து அவர் இந்துமதத்திற்கு ஆற்றிய பங்களிப்புகளைப் பரிசீலனை செய்க.

03. I. தமிழகத்தில், கி.பி.550க்கு முற்பட்ட காலச் சைவத்தின் நிலை பற்றி யாது விளக்குவீர்?
   II. திருஞான சம்பந்தர் பாடல்களை அடிப்படையாகக்கொண்டு, பல்லவர் காலத்து பக்தி இயக்கம் செயற்பட்ட முறை பற்றி விளக்குக.

04. குப்தர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
   I. குப்தர் கால இந்துமதம் பற்றிய பிற நாட்டார் குறிப்புகள்.
   II. குப்தர் கால நாணயங்கள் காட்டும் இந்துமதம்
   III. குப்தர் கால இலக்கியங்கள் காட்டும் இந்துமதம்
   IV. குப்தர் கால கல்வெட்டுக்கள் காட்டும் இந்துமதம்

05. I. இந்துமத வரலாற்றில் மடங்களும், ஆதீனங்களும் தோன்றியதற்குரிய காலப் பின்னணியை விளக்குக.
   II. தர்மபுர ஆதீனம் அல்லது திருவாவடுதுறை ஆதீனம் இந்து மதத்திற்கு ஆற்றிய பங்களிப்புகளை விளக்குக.

06. ‘இந்துமதத்தைப் பொறுத்தவரை சோழர் காலம் பொற்காலம் ஆகும்’ என்பதை அக்கால இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் ஆலயங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அலசி ஆராய்க.

07. “புராணங்களின் அறிவு இன்றேல் இந்து சமயத்தை விளங்கிக்கொள்ள முடியாது” இக்கூற்று பொருந்துமோ என ஆராய்க.

08. பின்வருவனவற்றுள் இரண்டிற்குக் குறிப்புரை தருக.

1. நாலாயிரத் திவ்விய பிரபந்தம்
2. வீரசைவம்
3. கர்நாடக மாநிலமும் இந்து மதமும்
4. வேதகால பக்தியும் வளர்ச்சியும்